தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெற்பயிரில் குலைநோயைக் கட்டுப்படுத்த யோசனை**

தற்போதுள்ள நிலவிவரும் மேகமூட்டத்துடன் கூடிய குளிர்ந்த வானிலை காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிரில் குலைநோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதால், அந்நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான யோசனைகளை வேளாண்துறை தெரிவித்துள்ளது.இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட தகவல்:புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சுமார் 69 ஆயிரம் எக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவும் மேகமூட்டமான வானிலை, இரவு நேர பனிப்பொழிவு காரணமாக பயிரில் குலைநோய் தாக்குதல் வாய்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணல்மேல்குடி, அரிமளம் வட்டாரப் பகுதிகளில் பி.பி.டி. 5204 ரகத்தில் குலைநோய் தாக்குதல் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

பாதிப்பைக் கண்டறியும் முறை: குலை நோய் நெற்பயிரில் இலை, கணு, கதிரின் கழுத்து என 3 பகுதிகளைக் குறிவைத்துத் தாக்குகிறது. இதனால் நெற்பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இலைகளில் நீண்ட கண் வடிவ புள்ளிகளாகத்தான் முதலில் தோன்றும். இப்புள்ளிகளின் நடுப்பகுதி சாம்பல் நிறத்திலும், அதைச் சுற்றி கருமையான பழுப்பு நிறத்திலும் காணப்படும்.

நாளாக, நாளாக இப்புள்ளிகள் அருகருகே ஒன்றோடொன்று இணைந்து பெரிய புள்ளிகளாக மாறும். இப்புள்ளிகளால் இலையின் பகுதிகள் பலவீனமடைவதால் இலைகள் நார்நாராகக் கிழிந்து விடும். பார்ப்பதற்கு பயிர் காய்ந்தது போன்று காணப்படும். கணுக்களில் தாக்கப்பட்ட பகுதியும் கருமை நிறமாகி, பலவீனத்தால் எளிதில் ஒடிந்துவிடும். கதிரின் கழுத்துப் பகுதியும் இதே போன்று, கருப்பாக மாறி,

காற்றடித்தால் ஒடிந்து போகும். மணிகள் நெல்லாக மாறாமல் பதராகிவிடும். நாற்றங்காலில் குலைநோய் தாக்கினால் நாற்றுக்களும் கருகிவிடும்.

தடுக்கும் வழிமுறைகள்: விதைக்கும் முன்பே விதைகளுடன் பூஞ்சான மருந்து கார்பன்டாசிம் அல்லது சூடோமோனாஸ் கொண்டு விதைநோ0த்தி செய்து விதைக்க வேண்டும். வரப்புகளில் புற்களை வளர விடாமலும், ஏற்கெனவே இந்நோய் தாக்கிய வயலில் தழைச்சத்து உரங்களை அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறையாகப் பிரித்து இட வேண்டும்.

இந்த அறிகுறிகள் தென்பட்டால் சுற்றுச்சூழலைப் பாதிக்காத உயிரியல் பூஞ்சானக் கொல்லியான சூடோமோனாஸ்ப்ளோரசன்ஸ் என்ற மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் மூன்று முறை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். நோய்த் தாக்குதல் தீவிரமாகும்போது ஏக்கருக்கு 120 கிராம் டிரைசைக்ளோசோல் என்ற பூஞ்சானக் கொல்லி மருந்தைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.மானிய விலையில் மருந்து: எனவே, விவசாயிகள் குலைநோயைக் கட்டுப்படுத்துவதற்கான பூஞ்சானக்கொல்லி மருந்தை தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 50 சத மானிய விலையில் பெற்று நோயைக் கட்டுப்படுத்தலாம். தேவையான விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்புகொண்டு பயன் பெறலாம்.

**காரியாபட்டி பகுதியில் கோமாரி நோய் தாக்கி 10 மாடுகள் சாவு**

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி பகுதியில், கோமாரி நோய் தாக்கி, 10-க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன. காரியாபட்டி பகுதியில் சக்கரகோட்டை, விட்டிலாரேந்தல், சத்திரம்புளியங்குளம், துலுக்கன்குளம் உள்ளிட்ட கிராமங்களில், கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இந்நிலையில், தற்போது மாடுகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது. காற்று மூலம் பரவி, இந்நோய் தாக்கியதில், கடந்த ஒரு வாரமாக, இப்பகுதியை சேர்ந்த மாரியம்மாள், இருளாயி, சிட்டு, முருகன் உள்ளிட்டோரின் 10-க்கும் மேற்பட்ட மாடுகள், இளம்கன்றுகள் உயிரிழந்தன.

மேலும், பல மாடுகளுக்கும், இந்நோய் பரவியிருப்பதால், கால்நடை வளர்ப்போர் கவலை அடைந்துள்ளனர். ஆடுகளையும் இந்நோய் தாக்கி உள்ளது. மேய்ச்சலுக்கு சென்று திரும்பிய மாடுகள், கோமாரி நோயால், வாயில் நுரை தள்ளி, கால்களில் வெடிப்பு ஏற்பட்டு பலியாயின. விவசாயத்திற்கு வாங்கிய கடனை, அடைக்க முடியாத நிலையில், கோமாரி நோயால் மாடுகளும் பலியாவதால் விவசாயிகள் பெரும் தவிப்புக்கு ஆளாகி உள்ளனர். அத்துடன் காணை நோய் தாக்கியதில், மாடுகளின் நாக்கு சிவப்பு நிறத்தில் மாறி, கால்களில் வெடிப்பு ஏற்பட்டு, பலியாகி வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். பலியான மாடுகளுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்குவதுடன், மற்ற கால்நடைகளுக்கும் தரமான மருத்துவ சிகிச்சை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றி கால்நடை மருத்துவர் கூறியதாவது: பருவநிலை மாற்றத்தால் கிடை மாடுகளுக்கு ஏற்படும் காய்ச்சல் தான் இது. கோமாரி நோய் அல்ல. இருந்தாலும் அவ்வப்போது பரிசோதித்து சிகிச்சை அளித்து வருகிறோம் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 65.39 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 942 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 9.13 டி.எம்.சி. ஆகும்.

**கன்று ஈன்ற மாடுகளுக்கு புதிய நோய் பாதிப்பு: கால்நடைத்துறை கவனிக்குமா?**

வெள்ளக்கோவில் பகுதியில் கன்று ஈன்ற மாடுகளுக்குப் பரவி வரும் ஒரு வித நோய், கால்நடை வளர்ப்போரிடத்தில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோயின் தாக்கம் அதிகரித்திருந்தது. இதனால் பலர் பொருளாதார இழப்புக்கு ஆளாகியிருந்த நிலையில், மற்றொரு அதிர்ச்சியாக கன்று ஈன்ற மாடுகளை புது வித நோய் தாக்கி வருகிறது.

இது குறித்து அகலரைப்பாளையம்புதூரைச் சேர்ந்த விவசாயி குமார் கூறியது: இந்த நோயின் தாக்கத்தால், கன்று ஈன்ற உடன் அல்லது அதற்குப் பிறகு மாட்டின் கால்கள் செயலிழந்து நிற்க முடியாமல் திடீரென படுத்து விடுகின்றன. தீனியும் உட்கொள்ள முடிவதில்லை. மருத்துவமனைக்கும் எடுத்துச் செல்ல முடிவதில்லை. இதனால் கன்றும், மாடும் உயிரிழக்கும் ஆபத்து உள்ளது.

கால்சியம் பற்றாக்குறையால் பக்கவாதம் ஏற்பட்டுள்ளது எனவும், ஒரு வார காலம் தொடர் சிகிச்சையளிக்க வேண்டும் என கால்நடை மருத்துவர் தெரிவித்துள்ளார். மாத்திரைகள், மற்றும் ஊசி மூலம் திரவ மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. தினமும் ரூ.500 செலவாகிறது என்றார்.

இதில், சிகிச்சை பலனின்றி உயிரிழப்புக்களும் ஏற்படுவதாகத் தெரிகிறது. இது போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த அரசு கால்நடை பராமரிப்புத்துறை தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென விவசாயிகள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.

**காய்கறி விற்பனை மையங்களை அமைக்க மானியத்துடன் கடனுதவி**

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை கொள்முதல் செய்து விற்பனை செய்யும் மையங்களை அமைப்பவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்பட உள்ளது.

இது குறித்து தோட்டக் கலைத் துறை இணை இயக்குநர் ராஜூ செய்தியாளர்களிடம் கூறியது:

விழுப்புரம் மாவட்டத்தில் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலனுக்காக, ஒலக்கூர் உள்பட இரு இடங்களில் ஏற்கெனவே காய்கறி சேகரிப்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இதுபோல் காய்கறி சேகரிப்பு மையங்களை தொடங்குபவர்களுக்கு ரூ.4 லட்சத்துக்கு மிகாமல் 50 சதவீத மானியம் அளிக்கப்பட உள்ளது. இத் திட்டத்தின் கீழ் காய்கறி சேகரிப்பு மையம் தொடங்குபவர்களுக்கு அந்த ஊராட்சி மூலம் இடம் ஒதுக்கித் தரப்படும். சேகரிப்பு மையங்களை தொடங்குபவர்கள் அதற்கான கட்டடங்களை கட்டிக் கொள்ள வேண்டும்.

அதேபோல் இந்த காய்கறி சேகரிப்பு மையங்களில் இருந்தும், விவசாயிகளிடம் இருந்தும் நேரடியாக காய்கறிகளை வாங்கி வந்து விற்பனை செய்பவர்கள் கடைகளை அமைக்க 40 சதவீத மானியத்தில் கடனுதவி அளிக்கப்பட உள்ளது. அதேபோல் காய்கறி சேகரிப்பு மையங்களில் இருந்து இந்த கடைகளுக்கு காய்கறிகளை எடுத்துச் செல்லும் வேன்கள் வாங்குவதற்கும் 40 சதவீத மானியத்தில் கடனுதவி அளிக்கப்பட உள்ளது.

ஆனால் இந்த கடனுதவியை பெறுபவர்கள் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பொருள்களை கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும். இது தொடர்பாக சென்னையில் வரும் டிசம்பர் 13-ம் தேதி ஆணையர் அலுவலகத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெற உள்ளது.

இதுபோன்ற காய்கறி சேகரிப்பு மையங்கள், விற்பனை மையங்களை தொடங்க ஆர்வம் உள்ளவர்கள் இக் கூட்டத்தில் பங்கேற்று உரிய விளக்கங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

### முட்டை விலை மேலும் சரிவு: 15 காசுகள் குறைந்தது

வட மாநிலங்களில் முட்டை விலை வேகமாகச் சரிந்து வருவதை அடுத்து, நாமக்கல் மண்டலத்தில் முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை இரண்டாவது நாளாக திங்கள்கிழமையும் 15 காசுகள் குறைக்கப்பட்டன. இந்த விலை மேலும் குறையக்கூடும் என்பதால், பண்ணையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

வட மாநிலங்களில் முட்டை நுகர்வு அதிகரித்ததால், கடந்த ஒரு வாரமாக முட்டை கொள்முதல் விலை வேகமாக உயர்த்தப்பட்டு வந்தது. இதைத் தொடர்ந்து, சபரிமலை சீசன் மந்த நிலையையும் தாண்டி நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை ரூ.4.03 வரை உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், முட்டை விலை அதிகரிப்பால், முட்டை நுகர்வில் ஏற்பட்ட பாதிப்பால், தில்லி, பர்வாலா, மும்பை போன்ற மண்டலங்களில் முட்டை விலை பெருமளவில் சரிந்து வருகிறது.

இதுதவிர, சபரிமலை சீசனால் நாமக்கல் மண்டலத்திலும் ஏற்பட்டுள்ள வர்த்தகப் பாதிப்பு காரணமாகவும் இந்த மண்டலத்தில் முட்டைக் கொள்முதல் விலை

ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 13 காசுகள் குறைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, திங்கள்கிழமை மேலும் 15 காசுகள் குறைக்கப்பட்டு, முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை ரூ.3.75ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சந்தை நிலவரத்தைப் பார்க்கும்போது இந்த விலைக் குறைப்பு மேலும் நீடிக்கும் என்றே கூறப்படுகிறது. இதனால், நாமக்கல் மண்டல கோழிப் பண்ணையாளர்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மிகக் கடுமையான தீவன விலையேற்றத்துக்கு மத்தியில் இரண்டே நாளில் முட்டை விலை 28 காசுகள் குறைக்கப்பட்டிருப்பது கோழிப் பண்ணைத் தொழிலுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும். எனவே, விலை சரிவால் பண்ணையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கோழிப் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மற்ற மண்டலங்களில் விலை நிலவரம்: சென்னை -ரூ.3.92, பெங்களூரு -ரூ.3.92, மைசூரு -ரூ.3.93, ஹைதராபாத் ரூ.3.81, மும்பை ரூ.4.18, விஜயவாடா ரூ.3.75, கொல்கத்தா ரூ.4.02, பர்வாலா ரூ.3.80, தில்லி -ரூ.4.05.

**மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை**

புயல் எச்சரிக்கையால் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் திங்கள்கிழமை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.இந்நிலையில் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு போராட்டத்தைக் கைவிட்ட மீனவர்கள் திங்கள்கிழமை மீன்பிடிக்கச் செல்ல ஆயத்தமான நிலையில் புயல் எச்சரிக்கையால் மீன்வளத் துறையினர் அவர்களைக் கடலுக்குள் அனுமதிக்கவில்லை.இதனால், மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் ஆகிய இரு துறைமுகங்களில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. இதனால் படகுகள் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன

**எண்ணெய்வித்துகளில் கூடுதல் மகசூல்: விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி**

குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில், எண்ணெய் வித்து சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறும் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருகே மருதம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமை புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் தொடக்கிவைத்துப் பேசியது:

எண்ணெய்வித்து பயிர்களை புதிய வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்தால், கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெற முடியும். எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தில் விவசாயிகளுக்கு விதைகள், ஜிப்சம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கருவிகள், உயிர் உரங்கள் மானியத்தில் அளிக்கப்படுவதை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

நிலக்கடலையில் ஜிப்சம் இடுதலின் அவசியம், ஊட்டச்சத்து கரைசல் தெளிக்கும் முறைகள் ஆகியவற்றை படக்காட்சிகள் மூலம் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன் விளக்கினார். விராலிமலை வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் வேளாண் திட்டங்கள், மானியத்தில் விநியோகம் செய்யப்படும் இடுபொருட்கள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் கிருஷ்ணகுமார் விளக்கினார்.

இதில், வட்டார துணை வேளாண் அலுவலர் முத்துச்சாமி, உதவி வேளாண் அலுவலர்கள் ஆர். சேகர், கிருஷ்ணசாமி, எஸ். சேகர் ஆகியோர் விதைநேர்த்தி செய்யும் முறைகள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கத்தொகை மற்றும் எண்ணெய்வித்து தொழில்நுட்பக் கையேடுகள் வழங்கப்பட்டன. இதில், மருதம்பட்டி ஊராட்சித் தலைவர் பிச்சைகண்ணு, கேர் தொண்டு நிறுவன செயலர் சித்திக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வேளாண் காப்பீட்டு திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவு: உழவர் முன்னணி கண்டனம்

வேளாண் காப்பீடு திட்டத்தை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ள மத்திய அரசை வன்மையாக கண்டிப்பது என தமிழக உழவர் முன்னணி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழக உழவர் முன்னளி கடலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் சிதம்பரத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் அ.க.சிவராமன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சி.ஆறுமுகம், துணைச் செயலாளர் ரா.சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் சாக்காங்குடி என்.ஜெயபாலன், தங்க.கென்னடி, செயற்குழு உறுப்பினர்கள் வே.பொன்னுசாமி, சி.ராஜேந்திரன், வி.ராஜா, கோ.நாராயணசாமி, மு.சம்பந்தம், அ.மதிவாணன், மா.கோ.தேவராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் அக்ரிகல்சர் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் என்ற மத்தியஅரசு நிறுவனத்திடம் உள்ள உழவர்களுக்கான பயிர் காப்பீடு திட்டத்தை மாற்றி அமைத்து தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கு மத்தியஅரசு எடுத்துள்ள முடிவை வன்மையாக கண்டிப்பது; புதுச்சேரி அரசு செய்தது போல் உழவர்களின் பயிர் காப்பீடு கட்டணம் முழுவதையும் தமிழகஅரசே செலுத்த வேண்டும்; கடலூர் மாவட்டம் வீராணம்அரியின் பராமரிப்பு, நீர் நிர்வாகம் ஆகிய அனைத்தையும் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்; வேளாண் காப்பீடு திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை கைவிடக்கோரி கையெழுத்து இயக்கம் நடத்தி மத்தியஅரசுக்கு அனுப்புவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தொடரும் கடல் சீற்றம்: பைபர் படகு மீன்பிடிப்பு முடக்கம்




மீன்பிடிப்புக்குச் செல்லாமல் நாகையில் கரையில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி பைபர் படகுகள்.

நாகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் நீடித்து வரும் கடல் சீற்றம் காரணமாக, நாகை மாவட்டத்தில் பைபர் படகுகளில் மீன்பிடிக்க செல்வது தடைப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள மாதி புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கடல் சீற்றம் அதிகரித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு மீன்பிடி படகு நாகை முகத்துவாரம் அருகே கருங்கல் தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. படகுத் துறையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகு கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு, கருங்கல் தடுப்புச் சுவரில் மோதி சனிக்கிழமை விபத்துக்குள்ளானது.மாதி புயலையொட்டி, நாகை துறைமுகத்தில் சனிக்கிழமை ஏற்றப்பட்ட 2-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு 3-வது நாளாக திங்கள்கிழையும் நீடித்தது.நாகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் திங்கள்கிழமையன்றும் கடல் சீற்றம் நீடித்ததால், பைபர் படகு மூலமான மீன்பிடிப்பு முடக்கமடைந்திருந்தது. கடல் சீற்றத்தில் பைபர் படகின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால், பைபர் படகு மூலமான மீன்பிடிப்பை தவிர்த்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.நாகை, வேளாங்கண்ணி, செருதூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மீன்பிடி பைபர் படகுகள் கடலுக்குள் செல்லாமல், கரையில் நிறுத்தப்பட்டிருந்தன

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கடலை எண்ணெய், பொரி கடலை, சர்க்கரை விலை குறைந்தது : பருப்பு விலையில் மாற்றம் இல்லை



விருதுநகர்: விருதுநகர் சந்தையில், கடலை எண்ணெய், சர்க்கரை ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது. பருப்பு வகைகளின் விலையில் மாற்றமில்லை.சந்தையில், கடலை எண்ணெய்(15 கிலோ டின்) 1,300 ரூபாய்க்கும், சன்பிளவர் எண்ணெய் 1,250 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. இவற்றின் விலை, கடந்த வாரத்தைவிட, 'டின்'னுக்கு தலா, 50 ரூபாய் குறைந்துள்ளது.நிலக்கடலை பருப்புநல்லெண்ணெய் (2,900 ரூபாய்), பாமாயில், (1,025 ரூபாய்) ஆகியவற்றின் விலையில் மாற்ற-மில்லை.80 கிலோ நிலக்கடலை பருப்பு 3,900 ரூபாய்க்கும்,100 கிலோ, கடலைப் புண்ணாக்கு 3,300 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இவற்றின் விலை மூட்டைக்கு, 100 ரூபாய் குறைந்துள்ளது.சர்க்கரை விலை, கடந்த வாரத்தை விட, மூட்டைக்கு (100 கிலோ), 15 ரூபாய் குறைந்து, 3,015 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.55 கிலோ கொண்ட பொரிகடலை மூட்டை விலை, 100 ரூபாய் குறைந்து, 2,560 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மைதா90 கிலோ மைதா மூட்டை (3,090ரூபாய்) மற்றும் 90 கிலோ ரவை மூட்டை (3,385 ரூபாய்) விலையில் மாற்றமில்லை.பர்மா உளுந்து, 100 கிலோ (பொடி வகை), 4,350 ரூபாய்க்கும், பருவட்டு வகை, 4,650

ரூபாய்க்கும், நாட்டு உளுந்து 5,400 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.100 கிலோ உளுத்தம் பருப்பில், பர்மா பொடி வகை, 5,300 ரூபாய்க்கும், பருவட்டு வகை, 5,800 ரூபாய்க்கும், நாட்டு வகை, 6,900 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்-றன.100 கிலோ துவரம் பருப்பில், நாட்டுவகை, 6,900 ரூபாய்க்கும், இரண்டாம் வகை, 6,000 ரூபாய்க்கும், பொடி வகை, 5,700 ரூபாய்க்கும் விற்கப்படுகின்-றன.கடந்த வாரத்தை விட, இவற்றின் விலையில் பெரிய அளவில் மாற்றமில்லை. அடுத்த சில வாரங்களில், கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, துவரம் பருப்பு வரத்து அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், இவற்றின் விலை குறைய வாய்ப்புள்ளது.மிளகாய் வற்றல்முதல் ரக பாசிப்பருப்பு (100 கிலோ), 8,200 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 8,000 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.ஆந்திரா, குண்டூர் மிளகாய் வற்றல், 100 கிலோ, 8,000 முதல் 8,100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு வற்றல் வரத்து இல்லை.

## தேவை குறைந்ததால்தேயிலை விலை சரிவு



ஊட்டி: உலக நாடுகளில், தேயி-லைக்கு கிராக்கி குறைந்துள்-ளதால், நீலகிரிதேயிலையை, விலை குறைவாக விற்க வேண்-டிய நிலைக்கு வர்த்தகர்கள் தள்-ளப்பட்டுள்ளனர்.தேக்கம்நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும், இந்தாண்டின், 49வது ஏலம் நேற்று நடந்தது. விற்பனைக்கு வந்த, 17 லட்சம் கிலோ தேயிலை துாளில், 82 சதவீத தேயிலை துாள் விற்று தீர்ந்தது. ஆனாலும், கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், கிலோவுக்கு, இரண்டு ரூபாய் குறைவாகவே, தேயிலை துாள் விற்கப்பட்டது. உலக சந்தையில், தேவைக்கேற்ற தேயிலை துாள் இருப்பதால், உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள், குன்னுார் தேயிலை ஏலத்தில் ஆர்வம் காட்டுவதில்லை. அதனால், தேக்கத்தை தவிர்க்க, தேயிலை

துாள் விலையை, குறைத்து விற்க வேண்டிய நிலைக்கு, வர்த்தகர்கள் தள்ளப்பட்டு உள்ளனர்.தேயிலை ஏல நிலவரம் குறித்து, சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறியதாவது:குன்னுார் தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், ரஷ்ய வர்த்தர்கள் மட்டுமே, தற்போது ஏலத்தில் பங்கேற்கின்றனர். வெளிநாடு களுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யும், குஜராத், ராஜஸ்தான், கர்நாடகா உட்பட, வட மாநில வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்பதை தவிர்த்து வருகின்-றனர்.வர்த்தகர்கள்இந்த வார ஏலத்தில், ஒரு கிலோ தேயிலை துாளின் சராசரி விலை, 73 ரூபாயாக இருந்தது; இது, மிகக் குறைந்த விலை. இப்படி, விலை குறைத்து விற்கப்படுவதால், கணிசமான அளவு தேயிலை துாளை வர்த்தகர்கள் வாங்குகின்றனர். இந்த அடிப்படையில், கடந்த வாரம், ஒன்பது கோடி ரூபாய்க்கும், இந்தவாரம், 10 கோடி ரூபாய்க்கும் வர்த்தகம் நடந்தது. இவ்வாறு சுந்தர் கூறினார்.

## தமிழகத்தில் 14 மாவட்டங்களில் தூய பால் உற்பத்தி திட்டம்!



திண்டுக்கல்:

பால் தரத்தை மேம்படுத்த, தமிழகத்தில் 14 மாவட்டங்களில் தூய பால் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பால் தரமுள்ளதாக உள்ளது. அதேப்போல், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தையும் மேம்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ.28.42 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், விவசாயிகளுக்கு, கால்நடைகளுக்கு தீவனம் அளிப்பது, சுகாதாரத்துடன் கால்நடைகளை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும். பால் கறப்பதற்கு தேவைப்படும் சில்வர் பாத்திரங்கள் இலவசமாக அளிக்கப்படும். மேலும், பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனை கூடங்கள் நவீனப்படுத்தப்படும். புதிய பால் குளிர்விப்பான்கள் நிறுவ 100% மானியம் அளிக்கப்படும். இதன் மூலம் பாலின் தரத்தை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**புயலால் ஐந்து நாட்களுக்கு பின் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள்**

ராமேஸ்வரம்: புயல், மழையால் மீன் பிடிக்க செல்லாமல் இருந்த, ராமேஸ்வரம் மீனவர்கள், ஐந்து நாட்களுக்கு பின், மீன்பிடிக்க நேற்று சென்றனர். கடந்த சில நாட்களாக, தமிழக கடலோரத்தில் காற்றுடன் தொடர் மழை பெய்தது. வங்க கடலில், புயல் சின்னம் உருவாகியது. ராமேஸ்வரம், பாம்பன் விசைப்படகு மீனவர்கள், இம்மாதம், 4ம் தேதி முதல், மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்பட்டது. வேலையின்றி மீனவர்கள் வீட்டில் முடங்கினர். காற்று, மழையின்றி நேற்று, கடல் அமைதியாக இருந்ததால், மீன்பிடிக்க செல்ல, மீன்துறையினர், அனுமதி டோக்கன் வழங்கினர். ராமேஸ்வரத்தில் இருந்து, 620 விசைப்படகுகளில், மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

**கை கொடுக்காத பருவமழை : குறைந்தது நிலத்தடி நீர்மட்டம்**

வடகிழக்கு பருவமழை, கை கொடுக்காததால், தமிழகத்தின் நிலத்தடி நீர்மட்டம், அறவே குறைந்தது. ஒவ்வொரு மாதமும், தமிழக நிலத்தடி நீர்மட்டம் குறித்து, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவர குறிப்பு மையம் ஆய்வு செய்து வருகிறது. இதற்கான, விவரங்களை சேகரிக்க, 3,238 பகுதிகளில் உள்ள, திறந்தவெளி கிணறுகள் மற்றும் 1,480 ஆழ்துளை கிணறுகள் பயன்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் மட்டம், மதிப்பிடப்படுகிறது. நவம்பர் மாத நிலவரப்படி, பல மாவட்டங்களில், நிலத்தடி நீர் குறைந்துள்ளது, ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஈரோடு, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம், தலா, 1.05 மி.மீ.,

அதிகரித்துள்ளது. 30 மாவட்டங்களில், நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. குறிப்பாக, கோவை, திருவண்ணாமலை, திண்டுக்கல், தேனி, விழுப்புரம் மாவட்டங்களில், அதிகளவில் குறைந்துள்ளது.

அக்டோபரில், 17 மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்தும், 18 மாவட்டங்களில், குறைந்தும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தென்னை மரம் ஏறும் கருவி செயல் விளக்கம்**

ஆழ்வார்திருநகரி:தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் கருவி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக மக்கள் முன்னேற்றகழகம் ஆழ்வார்திருநகரி, ஒன்றியம் மற்றும் நகர செயலாளர்கள் முன்னிலையில் ஆழ்வார் திருநகரியில் மாலை வேலையில் செம்பூர் விவசாயி முத்துராமன் ஸ்காட் வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி பெற்று வந்து, ஆழ்வார்திருநகரி வட்டார விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் கருவி செயல் விளக்கம் செய்து காண்பித்தார். திரளான விவசாயிகள் கலந்து கொண்டார்கள். இதில் நாம் தமிழர் கட்சி ஒன்றிய செயலாளர் சுடலை, தமிழக மக்கள் முன்னேற்ற கழக ஆழ்வார்திருநகரி நகர செயலாளர் முத்தரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வறட்சியால் தென்னை விவசாயிகள் பாதிப்பு: ஊக்குவிக்க பயிற்சி**

திண்டுக்கல்:வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நடவிலிருந்து அறுவடை வரையிலான புதிய தொழில்நுட்பம், இலவச பயிற்சி மற்றும் கருவியை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது.கடந்த இரண்டு ஆண்டுகளாக நீடித்த வறட்சியினால், ஏராளமான தென்னை மரங்கள் கருகின. பற்றாக்குறை காரணமாக தேங்காய் விலை அதிகரித்துள்ளது. தென்னையினால் அடுத்த சில ஆண்டுகள் வரை வருவாய் ஈட்ட முடியாததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். இவர்களை ஊக்குவிப்பதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து வேளாண் தொடர்பான சேவைகளை வழங்கி வரும் எம்.எஸ். சுவாமிநாதனின் கிராம வள மையங்களின் மூலமாக இலவச கருவி மற்றும் நடவிலிருந்து அறுவடை வரையிலான புதிய தொழில் நுட்பங்களை கற்றுகொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னையில் ஏறுவதற்காக ரூ. 3 ஆயிரம் மதிப்பிலான கருவி, பயிற்சியில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவ காப்பீடு திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மையத்தில் பணியாற்றும் களப்பணியாளர்கள், கிராமங்களுக்கு சென்று விவசாயிகளின் பெயர் மற்றும் தகவல்களை பதிவு செய்து பயிற்சிக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு நுண்ணுயிர் உரம்**

பட்டிவீரன்பட்டி:சித்தரேவில் தென்னை உற்பத்தியாளர்கள் சங்கத்தினருக்கு, மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் இலவசமாக நுண்ணூட்ட உரம் வழங்கப்பட்டது. ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உரம், 55 நபர்களுக்கு வழங்கப்பட்டது. விழாவிற்கு சித்தரேவு ஊராட்சி தலைவர் ஜெயராஜ் தலைமை வகித்தார். தென்னை வளர்ச்சி கள அலுவலர் பரமசிவம், அய்யம்பாளையம் தென்னை விவசாய கூட்டுறவு இணைய தலைவர் காசி ஆகியோர் முன்னிலை வகித்து, திட்டங்கள் குறித்து விளக்கினர். சித்தரேவு தென்னை விவசாயிகள் சங்க செயலாளர் புகழேந்தி வரவேற்றார். சங்க தலைவர் மணி நன்றி கூறினார். பொருளாளர் அப்துல்சலாம், நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தாண்டிக்குடியில் உற்பத்தியாகும் "ஹெலிகோனியம் மலர்கள்**

தாண்டிக்குடி:தாண்டிக்குடியில் உற்பத்தியாகும் "ஹெலிகோனியம்' மலர்கள் மேடை அலங்காரம் மற்றும் பொக்கே தயாரிப்பில் முக்கியத்துவம் பெறுகிறது. தாண்டிக்குடி பகுதியில் பசுமைக்குடிலில் கார்னேசன், ஜெர்ப்ரா, லில்லியம் கொய்மலர்களும், திறந்தவெளியில் ஹெலிகோனியம், ஆந்தோரியம் உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக ஹெலிகோனியத்தில் 7 வகையான பூக்கள் இங்கு உற்பத்தியில் உள்ளது. தற்போது செக்சி பிங்க், கம்மிங் பேடு, சாரோனி, மினிசர் வகை பூக்கள் பறிக்கப்பட்டு வருகிறது. எளிதில் வாடாத தன்மையுள்ள இவை 15 நாள் வரை தாக்குபிடிக்கும் தன்மை கொண்டது.

தனியார் நிறுவன மேலாளர் ராஜாதாஸ் கூறியதாவது: பொதுவாக நடவு செய்த ஐந்தாவது மாதத்தில் பூக்கும் தன்மை கொண்டது. ஓராண்டுக்கு நூறு பூக்கள் வரை பறிக்கலாம். மேடை அலங்காரம், பொக்கே தயாரிப்புக்கு அதிகளவு பயன்படுகிறது. மார்க்கெட்டில் தரத்திற்கு ஏற்றார் போல் ரூ.50 முதல் ரூ.150 வரை விலை கிடைக்கிறது. இதன் நாற்றுக்களும் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. நாற்று ஒன்று ரூ.25 முதல் 50 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, என்றார்.

**மார்க்கெட் மந்தம் எதிரொலி நிலக்கடலை விலை சரிந்தது**

அவிநாசி : சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 4,000 மூட்டைகளே வரத்தாக இருந்தன. இது, கடந்த வாரத்தை விட 1,000 மூட்டைகள் குறைவு. கடந்த வாரத்தை போல், இந்த வாரமும், அனைத்து ரகங்களின் விலையும் குவிண்டாலுக்கு ரூ.200 முதல் 500 வரை விலை குறைந்தது. நிலக்கடலை ரகங்களின் விலை நிலவரம் (குவிண்டாலுக்கு): முதல் ரகம் ரூ.3,400 முதல் 3,800 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,000 முதல் 3,360 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,700 முதல் 2,950 வரை, பச்சை ரகம் ரூ.1,500 முதல் 1,800 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது.

ஒழுங்குமுறை விற்பனை கண்காணிப்பாளர் சண்முகம் கூறுகையில், ""எண்ணெய் மார்க்கெட் மந்தமாக உள்ளதால், கடந்தாண்டை விட இந்தாண்டு விளைச்சல் இரு மடங்கு அதிகரித்துள்ளதால், நிலக்கடலை விலை குறைந்து வருகிறது. அதே சமயம், காய்களின் தரமும் குறைவாக உள்ளது, விலை குறை வுக்கு மற்றொரு காரணம். ரூ.48 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. 575 விவசாயிகள், 21 வியாபாரிகள் பங்கேற்றனர்," என்றார்.

**பசுமை காடு திட்ட பணிகள் மாநகராட்சி கமிஷனர் ஆய்வு**

திருச்சி: பசுமை காடுகள் திட்டப் பணிகளை மாநகராட்சி கமிஷனர் தண்டபாணி நேரில் ஆய்வு செய்தார்.

திருச்சி மாநகராட்சி பசுமைத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பஞ்சப்பூரில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான 5 ஏக்கர் பரப்பளவில் நகர்புற

பசுமை காடுகள் திட்டத்தின் கீழ் மரக்கன்று நடப்பட்டு, மாநகராட்சியால் பராமரிக்கப்பட உள்ளது.

அதற்கான பணிகள் தற்போது நடந்து வருகிறது. அதன் பணிகளை மாநகராட்சி கமிஷனர் தண்டபாணி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, நகர் நல அலுவலர் மாரியப்பன், செயற்பொறியாளர் நாகேஷ், உதவி கமிஷனர்கள் தயாநிதி, பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர்கள் பாலகுருநாதன், கண்ணன், அமுதவள்ளி, குமரேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**கோமாரியால் இறந்த மாட்டு இறைச்சி விற்பதை தடுக்க கலெக்டரிடம் புகார்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய் பாதித்த மாடுகளை கொண்டு, இறைச்சி விற்பனை செய்யும் கடைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி, குறைதீர் கூட்டத்தில் மனு வழங்கப்பட்டது.

குறைதீர் கூட்டத்தில் டி.ஆர்.ஓ., கணேஷிடம், மதுரை வீரன் மக்கள் கூட்டமைப்பு தலைவர் வீரக்குமார் வழங்கிய கோரிக்கை மனுவில் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் மரப்பாலம், பி.பி.அக்ரஹாரம், குயவன் திட்டு உள்ளிட்ட பல இடங்களில் மாடுகள் இறைச்சிக்காக அறுக்கப்படுகிறது. இங்கிருந்து எடுத்து செல்லப்பட்டு, மாநகராட்சியில், 20க்கும் மேற்பட்ட இடங்களில் மாட்டுக்கறி விற்பனை கடைகள் உள்ளன.

வீடுகள், ஹோட்டல்கள், சில்லிக்கடைகள், டாஸ்மாக் பார்களுக்கு, மாட்டு இறைச்சி வாங்கிச்செல்கின்றனர். கடந்த இரண்டு மாதமாக, ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோயால் மாடுகள் பாதிக்கப்பட்டு, 50க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்து போயின.

மாவட்டத்தில் கிராமப்புறங்களிலும், நகர் பகுதியிலும், நோய் பாதித்த இறக்கும் நிலையிலுள்ள மாடுகளை, குறைந்த விலைக்கு வாங்கி வந்து சில கறிக்கடைக்காரர்கள் இறைச்சிக்காக பயன்படுத்துகின்றனர்.

பொதுமக்கள் நலன் கருதி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், மாநகராட்சி நகர் நல அலுவலர், சுகாதார ஆய்வாளர், கால்நடை மருத்துவர்கள், போலீஸார்

கொண்ட குழுவை அமைத்து, இதுபோன்ற இறைச்சி கடைகளை கண்டுபிடித்து, இறைச்சிகளை பறிமுதல் செய்யவும், உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும், என கோரியிருந்தனர்.

**பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக்கோரி தஞ்சை அருகே விவசாயிகள் மறியல்**

தஞ்சாவூர்: "தஞ்சை அருகே கண்டியூரில், சம்பா பருவ பாசனத்துக்கு போதிய தண்ணீரை குடமுருட்டி, காவிரி ஆறுகளில் திறக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரி விவசாயிகள் 200க்கும் மேற்பட்டோர் திடீர் மறியல் போராட்டம் நடத்தினர். இதனால், பரபரப்பு ஏற்பட்டது.

தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுக்காவில், கண்டியூரில் திருவையாறு-தஞ்சை ரோட்டில் அனைத்து தரப்பு விவசாயிகள் சார்பில் திடீரென சாலைமறியல் போராட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு நடந்தது.

இதில், திருவையாறு பகுதியிலுள்ள அரசூர், அம்மன்பேட்டை, கண்டியூர், திருவேதுகுடி, வீரசிங்கம்பேட்டை பகுதிகளுக்கு உள்பட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

போராட்டத்தில், காவிரி பாசன பகுதிக்கு உள்பட்ட குடமுருட்டி, காவிரி ஆறுகளில் பாசனத்துக்கு தண்ணீரை போதுமான அளவில் கடந்த இரண்டு மாதமாக பொதுப்பணித் துறையினர் திறந்து விடவில்லை. இதனால், ஒரு ஏக்கருக்கு களை எடுப்பு பணிக்கு ஆயிரம் ரூபாய் செலவுக்கு பதிலாக, ஏழாயிரம் ரூபாய் ஆகியுள்ளது.

போதுமான தண்ணீரை திறந்து, வயலில் தண்ணீர் இருந்திருந்தால் களைகள் மண்டியிருக்காது. தண்ணீர் பற்றாக்குறையால் களைகள் அதிகம் மண்டி, களைஎடுப்பு செலவும் அதிகரித்து இருக்காது.

தற்போது முன்பட்ட சம்பா பயிர்களில், கதிர்கள் வெளிவரும் பருவத்தில் இருப்பதால், தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், தண்ணீரின்றி பயிர் சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், குடமுருட்டி ஆறு மற்றும் காவிரி

ஆறுகளில் முறை வைக்காமல் 10 நாட்களுக்கு முழு கொள்ளளவும் தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதனால், அவ்வழியே அரைமணிநேரம் போக்குவரத்து பாதித்தது. தகவலறிந்து, திருவையாறு டி.எஸ்.பி., கலிபுல்லா மற்றும் வருவாய்த்துறையினர் விரைந்து வந்து, சமரச பேச்சு நடத்தினர்.

இதில், மேற்கண்ட ஆறுகளில் மூன்று நாட்களில் காவிரி நீர் திறப்பது குறித்து, பொதுப்பணித்துறையினர் கவனத்துக்கு கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என, அதிகாரிகள் உறுதியளித்தனர். இதனால், போராட்டத்தினர் கலைந்து சென்றனர்.

**வடிகாலில் கடல்நீர் புகுவதால் பாசனம் பாதிப்பு: விவசாயிகள் மனு வழங்கல்**

தஞ்சாவூர்: "காவிரி டெல்டா பாசன பகுதியில் வடிகாலில் கடல்நீர் உட்புகுந்து, ஆழ்குழாய் கிணற்று நீர் முழுமையாக உப்பு நீராக மாறுவதை தடுக்க வேண்டும்' என, தஞ்சை டி.ஆர்.ஓ.,விடம் விவசாயிகள் சங்கத்தினர் மனு அளித்தனர்.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில், குறைதீர்க்கூட்டம் நேற்று நடந்தது. இதில், டி.ஆர்.ஓ., சுரேஷ்குமாரிடம் காவிரி தஞ்சை கடைமடை விவசாயிகள் சங்க நிறுவனர் ராஜராமலிங்கம் மற்றும் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

அம்மனுவில் கூறியுள்ளதாவது:

டெல்டா மாவட்ட விவசாயிகள் காவிரி நீரை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு, தற்போது கடல் நீரால் புது பிரச்னை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பாட்டுவனாச்சி வடிகாலில் கடல் நீர் உள்புகுந்து அப்பகுதி விவசாய நிலங்களிலுள்ள ஆழ்துளை கிணறுகளின் நீரும் உப்பு நீராக மாறிவிட்டது. இதனால், சாகுபடி பெருமளவு பாதித்து, விவசாயிகள் பரிதவிக்கின்றனர். இதுகுறித்து, பொதுப்பணித்துறையினருக்கு, உரிய ஆதாரத்துடன் கோரிக்கை மனு கொடுத்தும், எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. இதனால், விவசாயிகள் பாதிக்கும் சூழல் தொடர்ந்து நிலவுகிறது.

வெண்டாக்கோட்டை அணை ஷட்டர் உடைந்துள்ளது. இதனால், தண்ணீர் வீணாக வெளியேறுகிறது. இதனால், சுற்றுவட்டாரத்திலுள்ள ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பு பாசனம் பாதிக்கிறது. இதுகுறித்து, புகார் செய்தும் எவ்வித நடவடிக்கைகளையும் அதிகாரிகள் எடுக்கவில்லை.
இதனால், தற்போதும், நாள்தோறும் 200 ஏக்கர் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் வீணாகிறது. காவிரி பாசன விவசாயிகளை காப்பாற்றும் வகையில், பாட்டுவனாச்சி வடிகாலில் கடல் நீர் உட்புகுவதை தடுக்கவும், வெண்டாக்கோட்டை அணை ஷட்டர் பழுது நீக்கவும் பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, அதில் கூறியுள்ளனர்.

**பயிர் இன்சூரன்ஸ் கோரி கம்யூ., கட்சியினர் மறியல்**

திருவாரூர்: தமிழகத்தில், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர் இன்சூரன்ஸ் தொகையை அரசு வழங்கக்கோரி திருவாரூரில், 4 இடங்களில் ஒன்றிய மார்க்.கம்யூ., சார்பில் மறியல் போராட்டம் நடந்தது. இதில், 166 பேர்களை போலீஸார் கைது செய்தனர்.
திருவாரூர் அருகே மாவூரில், பயிர் இன்சூரன்ஸ் தொகையை அரசு வழங்கக்கோரி மார்க்.கம்யூ., சார்பில் நேற்று காலை 11 மணிக்கு மறியல் போராட்டம் நடந்தது. இதில், ஒன்றிய செயலாளர் மாதவன் தலைமை வகித்தார்.
இதேபோல மாங்குடி, கூடூர், புலிவலம் உள்பட மொத்தம் 4 இடங்களில் மார்க்.கம்யூ.,வினர் சாலை மறியல் போராட்டத்தை நேற்று நடத்தினர்.
நேற்று காலை 11 மணி முதல் 12 மணி வரை போராட்டம் நடந்தது. இதனால், அவ்வழியே போக்குவரத்து பாதிக்கப்பட்டது.
இதையடுத்து, மறியலில் ஈடுபட்ட 50 பெண்கள் உள்பட 166 பேரை திருவாரூர் தாலுக்கா போலீஸார் கைது செய்து, மாங்குடி திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

**தோட்டக்கலைத்துறையில் விவசாயிகள் மானியம் பெறுவதில் சிக்கல் சான்று வழங்க வருவாய்த்துறையினர் தயக்கம் காட்டுவதால்**

தேனி:சிறு,குறு விவசாயிகள் சான்று வழங்க வருவாய்த்துறை தயக்கம் காட்டுவதால்விவசாய, தோட்டக்கலைத்துறையில் மானிய திட்டங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்
எழுந்துள்ளது. தேனி மாவட்ட விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் சிறு விவசாயிகளுக்கு பல்வேறு மானிய திட்டங்கள்
நிறைவேற்றப்படுகிறது.இத்திட்டங்களில் நிதி உதவி பெறுவதற்கு, விவசாயிகள் தாலுகா அலுவலகத்தில் தாங்கள் சிறு,குறு விவசாயிகள் என்ற சான்று பெற வேண்டும்.ஆனால், இந்த சான்று வழங்க தாலுகா அலுவலகத்தில் தாமதிக்கின்றனர். விவசாயிகள் பல மாதங்கள் அலைந்தாலும், சான்று பெற முடியவில்லை. இந்த சான்று பெற முடியாததால், மானியத்திற்கு விண்ணப்பித்த பல விவசாயிகள், அடுத்து தோட்டக்கலைத்துறை, விவசாயத்துறை அதிகாரிகளை தேடி வருவதே இல்லை. சான்று இல்லாமல் உதவி செய்ய முடியுமா, என பரிதாபமாக கேட்கின்றனர்.
தவிர இந்த சான்று வாங்குவதற்கு, பல ஆயிரம் ரூபாய் செலவும் செய்ய வேண்டி உள்ளது.இந்த சான்று இல்லாமல் மானிய திட்டங்கள் வழங்க முடியாது.
எனவே, இந்த பிரச்னைக்கு முடிவு காண மாவட்டநிர்வாகம் ஒரு திட்டம் அமல்படுத்தியது. இத்திட்டத்தின் படி முகாம் நடத்தி, அங்கு வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை, விவசாயத்துறை அதிகாரிகளை வரவழைத்து சான்றும், மானிய உதவிகளும் ஒரே நாளில் வழங்க ஏற்பாடு
செய்யப்பட்டது.வருவாய்த்துறை ஒத்துழைப்பு இல்லாததால், மாவட்ட நிர்வாகத்தின் இந்த திட்டம் தோல்வியில் முடிந்தது. எனவே, தற்போது மீண்டும் பழைய நிலைமையே நீடிப்பதால், அரசின் மானியங்களை பெற விவசாயிகள் விண்ணப்பிக்க முடியாமல் தவிக்கின்றனர். தோட்டக்கலைத்துறையும், விவசாயத்துறையும், மானிய உதவிகள் வழங்க பயனாளிகளை தேர்வு செய்ய முடியாமல் தவிக்கிறது.

### மானிய விலையில் பயறு விதைகள்

கூடலூர்: மானிய விலையில் பயறு விதைகள், விவசாய விரிவாக்க மையத்தில் விற்பனைக்கு உள்ளதாக விவசாயத்துறை தெரிவித்துள்ளது.பசுந்தாள் உர விதைகள், பயறு வகை விதைகள், எண்ணெய் வித்து விதைகள் 50 சதவீத அரசு மானிய விலையில், கம்பம் வட்டார விவசாய விரிவாக்க மையத்தில் விற்பனைக்கு உள்ளது. ஒரு ஏக்கருக்கு தேவையான, 12 கிலோ பசுந்தாள் உரமான தக்கைப்பூண்டு விதையினை பயிரிட்டு, மடக்கி உழவு செய்வதன் மூலம், மண்ணின் இயற்கை உர அளவினை அதிகரிக்க முடியும். மானாவாரி மற்றும் இறவைப் பாசன விதைப்பிற்கு தேவையான வம்பன் 4 சான்று உளுந்து விதையும்,பாசிப்பயறு கோ-6 சான்று விதையும் இருப்பில் உள்ளது. ஒரு ஏக்கருக்கு தேவையான 8 கிலோ விதையினை,விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் பெறலாம். மேலும்,கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்ய நிலக்கடலை டி.எம்.வி. சா. விதையினை விதைக் கிராமத்திட்டத்தின் கீழ் 29 ரூபாய் மானிய விலையில் பெறலாம். நடப்பு சம்பா பருவத்திற்கு உரிய ஏ.டி.டி.39 ரக நெல் விதையும் இருப்பில் உள்ளது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள், உதவி விவசாய அலுவலர்களை தொடர்பு கொண்டு பெறலாம், என கம்பம் வட்டார விவசாய உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கையில் பனை சாகுபடி திட்டம் விரைவில் துவக்கம்

சிவகங்கை:மாவட்டத்தில்,நடப்பாண்டில் 210 ஏக்கரில் எண்ணெய் தயாரிக்க பனை (பாமாயில்) சாகுபடி திட்டம் செயல்படுத்த,கோத்ரேஜ் ஆயில் நிறுவனத்திற்கு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்தில் உணவு பொருட்கள் தயாரிக்க, பாமாயில் அதிகம் தேவைப்படுகிறது.பாமாயில் எண்ணெய் மலேசியா,இந்தோனேசியாவில் இருந்து, இறக்குமதி செய்யப்படுகிறது. தட்டுப்பாடு காரணமாக,இதன் விலை அதிகரித்துள்ளது. தட்டுப்பாட்டை தவிர்க்க, விவசாயிகளிடம், பனை சாகுபடியை ஊக்கப்படுத்த வேண்டும் என, முதல்வர் ஜெ., அறிவித்தார். இதற்காக, மானியத்தில் மரக்கன்று, விவசாய உபகரணங்கள்

வழங்கப்படுகிறது. சிவகங்கையில் துவக்கம்:
தஞ்சாவூர், திருச்சி, கடலூர், கரூர், விழுப்புரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில்,கோத்ரேஜ் ஆயில் நிறுவனம் சார்பில் பாமாயில் தயாரிக்க பனை சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.வறட்சி மாவட்டமான சிவகங்கையிலும், நடப்பாண்டு முதல், பனை சாகுபடி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.
மார்ச் 2014-க்குள் மாவட்ட அளவில், 210 ஏக்கரில், சாகுபடி செய்யப்படும். முதற்கட்டமாக, சிவகங்கை அருகே வேம்பத்தூரில் விஸ்வநாத ஐயர் தோட்டத்தில், சாகுபடியை துவக்க, கோத்ரேஜ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
இத்திட்டத்தில்,தென்னை மரக்கன்றுகள் போன்று,பனை கன்றுகள் மானியத்தில் தரப்படும்.கன்றின் விலை ரூ.85. இதில், விவசாயி ரூ.16.85 கட்டினால் போதும். எஞ்சிய தொகையை அரசு மானியமாக வழங்கும். இந்த கன்றுகளுக்கு சொட்டுநீர் மூலம், தண்ணீர் பாய்ச்ச தேவையான, சொட்டு நீர் பாசன கருவிகளுக்கு, எக்டேருக்கு ரூ.10 ஆயிரம், பூச்சி நோய் மருந்து, உரம் உள்ளிட்டவைக்கு,எக்டேருக்கு ரூ.10 ஆயிரம் மானியம் தரப்படுகிறது. கன்று நடவு செய்து, 3.5 ஆண்டுகளுக்கு பின்பே, விளைச்சல் இருக்கும். இதனால், 3 ஆண்டு வரை, ஊடுபயிர் நடவு செய்து, விவசாயிகள் சம்பாதிக்கலாம். 3.5 ஆண்டுகளுக்கு பின், பேரிச்சம்பழம் போல், மரத்தில் காய்கள் விளையும். ஒரு கொத்திற்கு 35 கிலோ கிடைக்கும்.இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்துமாறு,விவசாயத்துறையினர் தெரிவிக்கின்றனர்.
கோத்ரேஜ் பாமாயில் நிறுவன உதவி மேலாளர் மாணிக்கம் கூறியதாவது: பனை சாகுபடி திட்டத்தில்,விவசாயிகள் கன்றுகளை நடவு செய்து,அதிக விளைச்சல் பெறலாம்.இவற்றை, பாமாயில் எண்ணெய் உற்பத்திக்காக, டன்னிற்கு ரூ.6,800 வரை விலை கொடுத்து, விவசாயிகளிடம் நேரடியாகவே வாங்குவோம்,என்றார்.

## நெல்லுக்கு போதிய விலை இல்லை கிணற்று பாசன விவசாயிகள் கவலை

காஞ்சிபுரம் : நெல்லுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என, பாலாற்று கரையோர விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். காஞ்சிபுரம் அடுத்த விப்பேடு, விஷார், நரப்பாக்கம், மேட்டுப்பாளையம், பெரும்பாக்கம் ஆகிய கிராமங்கள் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளன. இங்கு, 60க்கும் மேற்பட்ட கிணறுகள் மூலம், விவசாயிகள் குறுகிய கால ரக நெல் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். குடிநீர் பற்றாக்குறை, நெல்மணிகள் முற்றும் நேரத்தில் திடீர் மழை ஆகிய இடையூறுகளை தாண்டி, விவசாயிகள் நெல் பயிரை தற்போது அறுவடை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, மேட்டுப்பாளையத்தை சேர்ந்த விவசாயி ராஜா கூறும்போது, "பம்பு செட் தண்ணீர் மூலம், 10 ஏக்கர் பரப்பளவில் 'நெல் மூட்டைகளை தனியார் வியாபாரிகளுக்கு விற்று வருகிறோம். விலையை அவர்கள் தான் நிர்ணயம் செய்கின்றனர். ஆனால், எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. 80 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை நெல்லை, 970 ரூபாய்க்கு விற்று உள்ளேன். வேளாண்மை துறை மூலம் தற்காலிக நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்திருந்தால், எங்களுக்கு போதிய விலை கிடைத்திருக்கும்.

தற்காலிக நெல் கொள் முதல் நிலையம் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் குறைத்தீர்க்கும் கூட்டங்களில் தெரிவித்தும், செவிசாய்க்கவில்லை," என்றார்.

## வறட்சியில் வளம் காண திரவ நுண்ணுயிர் உரம்

தேவகோட்டை:தேவகோட்டை தாலுகாவில் 12 ஆயிரத்து 750 எக்டேரில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் மழை குறைவாக பெய்துள்ளது. வறட்சி நிலை வெளிப்படுத்தும் வகையில் வயல்களில் நெற்பயிர் வாடி நிற்கிறது. வாடி வரும் நெற்பயிர்களை காக்கவும் 10 தினங்களாவது பயிர் காயும் நிலையை தவிர்க்க பி.பி.எம். எனப்படும் மெத்திலோபாக்டீரியம் திரவ நுண்ணுயிர் உரம் பயன்படுத்தப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12ல் தமிழக விவசாயிகள் சங்க கூட்டம்**

ஈரோடு, : தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் வெங்கடாசலம் இதுகுறித்து தெரிவித்துள்ளதாவது, ஈரோடு மாவட்டத்தில் உள்ள சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு வெட்டி 6 மாதங்கள் ஆகியும் கரும்புக்கான நிலுவை தொகையை வழங்காமல் உள்ளது. மேலும் கடந்த 3 ஆண்டுகளாக விவசாயிகளிடம் பிடித்தம் சய்த வங்கி கடன் பாக்கி 30 கோடி ரூபாய்க்கு மேல் செலுத்தாத காரணத்தால் மீண்டும் வங்கிகளில் பயிர்கடன் பெற முடியவில்லை. இந்நிலையில் ஆலை நிர்வாகம் ஆலையை திறந்து பதிவு செய்யாத கரும்பையும், பதிவு கரும்போடு சேர்த்து ஆலையை இயக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும் இந்த ஆண்டு கரும்புக்கு உரிய விலையை மாநில அரசும், ஆலை நிர்வாகமும் அறிவிக்கவில்லை. இதுதொடர்பாக ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை.
மாநில அரசு கரும்புக்கான விலையை அறிவிக்க வலியுறுத்தியும், ஆலை நிர்வாகம் பழைய பாக்கியையும், வங்கி கடனை செலுத்த கோரியும் ஆலோசனை கூட்டம் வரும் 12ம் தேதி காலை 10 மணிக்கு ஆப்பக்கூடலில் உள்ள முருகன் கோவில் திடலில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் கலந்து கொள்ள கேட்டுக் கொண்டுள்ளார்.

**பரவலான மழையால் பசுந்தீவன தட்டுப்பாடு குறைந்தது**

ஈரோடு, : பரவலான மழையால் பசுந்தீவன கட்டுப்பாடு குறைந்தது. இதனால் கட்டாய விற்பனையில் இருந்து கால்நடைகள் தப்பின. ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கடுமையான வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனத்தட்டுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக பரவலாகவே கால்நடைகளுக்கு தீவனம் தர

முடியாத விவசாயிகள் தங்கள் ஆடு, மாடு, எருமை போன்றவற்றை விற்பனை செய்ய வேண்டிய அவலத்திற்கு தள்ளப்பட்டனர். இந்நிலையில் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை அவ்வப்போது தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் பெய்து வருவதால் சற்றே வறட்சியின் தாக்கம் நீங்கியுள்ளது. அதேசமயம் பவானிசாகர் அணைக்கும் ஓரளவு நீர்வரத்து அதிகரித்ததால் பவானி ஆற்றின் வழியே திறக்கப்படும் தண்ணீரை கொண்டு காலிங்கராயன் மற்றும் கொடிவேரி பாசனத்துக்கும், கீழ்பவானி பாசன வாய்க்காலுக்கும் தண்ணீர் திறக்கப்படுவதால் மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலும் கால்நடைகளுக்கான தீவனப்பயிர்களின் விளைச்சல் அதிகரித்துள்ளது. குறிப்பாக கால்நடைகள் அதிகமாக விரும்பி உண்ணும் சோளத்தட்டு, மக்காச்சோளம், சோளம் போன்றவற்றின் விளைச்சல் நன்கு விளைந்துள்ளது. கடந்த ஆண்டில் கால்நடைகளை பாதுகாப்பதற்கே தீவனங்கள் இல்லாமல் இருந்த நிலையில் தற்போது பரவலாகவே விவசாயிகள் கால்நடை தீவனங்களை பயிரிட்டிருப்பது தீவனத்தட்டுபாட்டை போக்கியுள்ளது.

பல இடங்களில் கடந்த ஆண்டு தரிசாக போடப்பட்டிருந்த நிலங்களில் கூட சோளத்தட்டு, மக்காச்சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்து அவற்றை விற்பனை செய்வதன் மூலம் கணிசமான லாபத்தை விவசாயிகள் சம்பாதிக்கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கால்நடை தீவனத்தட்டுபாடு காரணமாக கடந்த ஆண்டு பல விவசாயிகள் தங்கள் கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. குறிப்பாக ஆவின் கால்நடைத்தீவனத்தின் விலை அதிகரிப்பாலும், பசுந்தீவனம் கிடைக்காமல் தட்டுபாடு ஏற்பட்டதாலும் கடும் அவதியடைந்து வந்தனர். இதன்

காரணமாக கடந்த ஆண்டில் அதிகளவில் விவசாயிகள் தங்கள் கால்நடைகளை விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகினர். தற்போது மானாவாரி நிலங்களில் கூட பசுந்தீவனங்களை விதைத்துள்ள நிலையில் அவை நன்கு வளர்ந்துள்ளன. இதனால் கால்நடைகளுக்கு பசுந்தீவன தட்டுபாடு மிகவும் குறைந்துள்ளது. பல விவசாயிகள் தங்கள் மானாவாரி காடுகளில் பயிரிட்டுள்ள சோளத்தட்டு, பசும்புல், மக்காச்சோளத்தட்டு போன்றவற்றை வெட்டி சென்று விற்பனை செய்து லாபம் சம்பாதிக்கின்றனர். பசுந்தீவன தட்டுபாடு குறைந்துள்ள நிலையில் கால்நடைகளை விற்பனை செய்து வந்த விவசாயிகள் தற்போது தங்களது ஆடு,மாடு, எருமை போன்ற கால்நடைகளை விற்பனை செய்வதை தவிர்த்து வருகின்றனர். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**விதை கிராம திட்டப்பயிற்சி**

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டை அடுத்துள்ள இருதுகோட்டை ஊராட்சியில் வேளாண்துறை மூலம் விதை கிராம திட்டப்பயிற்சி முகாம் நடந்தது. கெலமங்கலம் வட்டாரம் தேன்கனிக்கோட்டை அருகேயுள்ள இருதுகோட்டை ஊராட்சி, சம்மந்த கோட்டை கிராமத்தில் வேளாண்துறை மூலம் விதை கிராமத் திட்டப்பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் சிறுதானியங்களான ராகி, கம்பு, சாமை, தினை போன்றவை விதைப்பதற்கு ஏற்றபடி நிலத்தை தயார் செய்தல், விதை நேர்த்தி, பயிர்பராமரிப்பு, பயிர் பாதுகாப்பு, மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில் கெலமங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரமகாலிங்கம்(பொ) சிறுதானியங்களில் உற்பத்தியில் உள்ள முக்கியத்துவம், சிறு தானியத்தின் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் லோகநாயகி, உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவானந்தம், சின்னபையன் ஆகியோர் செய்திருந்தனர்.

**கரூர் மாவட்டத்தில் பொய்த்தது பருவமழை பாலைவனமாக மாறும் அமராவதி ஆறு 10 ஆயிரம் ஏக்கரில் கருகும் பயிர்கள் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி பகுதியில் 10ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யும் அமராவதி பாசன விவசாயிகள் அணையிலிருந்து தண்ணீரை எதிர்பார்த்து கவலையுடன் காத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகே அமைந்துள்ள அமராவதி அணை 90 அடி உயரமும், 3039.92 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டது.

தற்போது அணையின் நீர்மட்டம் 34.97 அடியாக உள்ளது. 194 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தண்ணீர் எதுவும் வெளியேற்றப்படவில்லை. இந்த அணையின் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன.

இதில் கரூர் மாவட்டத்தில் மட்டும் 17ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்வது வழக்கம். அதிலும் குறிப்பாக அரவக்குறிச்சி வட்டத்தில் கொத்தப்பாளையம், சின்னதாராபுரம், ராஜபுரம் உள்ளிட்ட 30க்கும் மேற் பட்ட வருவாய் கிராமங்களில் அமராவதி பாசன விவசாயிகள் தற்போது 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் வாழை, சூரியகாந்தி, மஞ்சள், பருத்தி, சோளம், கம்பு போன்ற பணப்பயிர்கள் பயிரிட்டுள்ளனர். ஆனால் இப்பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் விவசாயிகள் அமராவதி ஆற்று நீரை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இந்நிலையில் அமராவதி நீர்பிடிப்பு பகுதியிலும் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் அமராவதி அணைக்கு தற்போது நீர்வரத்து 194 கனஅடி மட்டுமே வந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் கரூர் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பட்டை போக்க அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக அமராவதி பாசன விவசாயிகள் கூறுகையில்,

நடப்பு பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழை, பருத்தி, சோளம், கம்பு, சூரியகாந்தி,

மஞ்சள் உள்ளிட்ட பல பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ளது. இப்பகுதி அமராவதி ஆற்றில் தண்ணீர் இல்லாமல் ஆறு வறண்டு கிடக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க அரசு அமராவதி ஆற்றில் உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றனர்.

**அரியலூர் மாவட்ட டெல்டா பகுதிகளில் 22,200 எக்டேரில் சம்பா சாகுபடி களைகள் எடுக்கும் பணி தீவிரம்**

அரியர், : அரியர் மாவட்ட டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடிக்கு களை எடுக்கும் பணி தீவிரமாக நடந்து வரும் நிலையில், விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அரியர் மாவட்டத்தில் தா.பழூர், திருமானூர் ஆகிய ஒன்றியங்கள் டெல்டா பகுதிகளாக இருந்து வருகிறது. இந்நிலையில், நடப்பாண்டில் 22,200 எக்டேர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டில் பருவமழை சரிவர பெய்ய வில்லை. இதனால் விவசாய நிலங்கள் காய்ந்தும், ஏரி, குளங்கள் நிரம்பாமலும் இருந்தததது.

இதனால் அரியர் மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. மேலும் தொடர் மின்வெட்டால் பம்ப்செட் மூலமும் நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வந்ததால் குறுவை சாகுபடியை அறவே கைவிட்டனர். இருப்பினும் விவசாய நிலங்களை தரிசாகப்போடுவதற்கு மனமில்லாமல் சம்பா சாகுபடிக்காவது பருவமழை பெய்யும் என்று நம்பி சாகுபடி செய்தனர். ஆனால் போதுமான மழை பெய்யாமல் ஏமாற்றியது. மேலும் கர்நாடகத்திலிருந்து வரும் காவிரி நீரை தமிழகத்திற்கு தராமல் கைவிரித்ததால் டெல்டா பகுதிகளில் பயிரிட்ட விவசாய நிலங்கள் அனைத்தும் காய்ந்து பயிர்கள் கருகியதால் விவசாயிகள் கவலை அடைந்து வந்தனர்.

இப்படி பல்வேறு சூழ்நிலைகளை சந்தித்த விவசாயிகளுக்கு இந்தாண்டு அன்டை மாநிலங்களில் பெய்த கனமழையால் அங்குள்ள அணைகளில் நீர் நிரம்பி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமாகியது. அணையின் முழு கொள்ளளவையும்

எட்டியதால் தமிழக டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் நடப்பாண்டில் 22,200 எக்டேர் பரப்பளவில் சம்பா சாகுபடியை கடந்த சில மாதங்களுக்கு முன்பு விவசாயிகள் மேற்கொண்டனர். தற்போது சம்பா நாற்றுகள் நன்கு வளர்ந்து வருகிறது.

மேலும் பருவமழை தாமதமான போதிலும், சமீபத்தில் பெய்த மழை விவசாயத்திற்கு சற்று ஏற்றதாக இருந்தது. இதனால் விவசாயிகள் ஆர்வமுடன் விவசாய பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். தற்போது நெற்பயிர்களில் இலைசுருட்டுப்புழு, குலைநோய் தாக்குதல் என பல்வேறு நோய்கள் தாக்குதல் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் களைக்கொல்லி மருந்து மட்டும் தேவையான உரங்களை கலந்து தெளித்து வருகின்றனர். மேலும் தற்போதுள்ள பருவ சூழ்நிலைக்கும் நிலத்தில் களைச்செடிகள் மண்டி கிடப்பதால் நெற்பயிரின் ஊட்டச்சத்துக்களை அச்செடிகள் உள்வாங்கி கொள்கிறது. இதனால் பயிர் வளர்வதற்கு தடையாக உள்ள களைகளை அகற்றும் பணியில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் போதுமான தொழிலாளர்கள் பற்றாக்குறையால் விவசாய பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து டெல்டா பகுதி விவசாயிகள் கூறுகையில், கடந்தாண்டை போல் இல்லாமல் இந்த ஆண்டு போதுமான மழை பெய்து வருவது மகிழ்ச்சியை தந்தாலும், விவசாய பணிகள் செய்வதற்கு தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது கவலை அளிக்கிறது. முன்பெல்லாம் விவசாய பணிகள் செய்வதற்கு ஆர்வம் காட்டி வந்த தொழிலாளர்கள் முந்தைய நாளே வந்து ஆட்கள் எண்ணிக்கையை தெரிவித்து விட்டு மறுநாள் அதிகாலையிலேயே வேலைக்கு வந்து விடுவர்.

ஆனால் தற்போது 100 நாள் வேலை திட்டம் பல இடங்களில் சிறப்பாக நடந்து வருவதால் அப்பணிகளில் ஈடுபடுவதையே தொழிலாளர்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதனால் விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தற்போது விவசாய பணிகளை மேற்கொள்ள என்ன தான் நவீன விவசாய கருவி மற்றும் இயந்திரங்கள் வந்தாலும், அது விவசாயிகளுக்கு உரிய நேரத்தில்

கைகொடுப்பதில்லை. முதலில் விவசாய நிலத்தை உழுதுவிட்டு, பின்னர் நாற்று நட வேண்டும். அதன் பின்னர் அந்த நாற்றுகள் வளர ஆரம்பித்ததும் களைச்செடிகள் வளரும் போது அதை அகற்ற வேண்டும், பின்னர் நாற்றுகளுக்கு தேவையான உரம் மற்றும் களைக்கொல்லி மருந்து அடிக்க வேண்டும். இப்படி அறுவடை வரை பல்வேறு பணிகளுக்கு தொழிலாளர்கள் உதவி தான் தேவைப்படுகிறது. 100 நாள் வேலை திட்டத்தில் பல்வேறு பணிகளுக்கு தொழிலாளர்களை பயன்படுத்துவது போல், விவசாய பணிகளுக்கும் தொழிலாளர்களை பயன்படுத்தினால் ஆட்கள் பற்றாக்குறை ஏற்படாது. தொழிலாளர்களுக்கு தேவையான ஊதியமும் கிடைக்கும். விவசாயம் செழித்து விவசாயிகளின் வாழ்வாதாரமும் உயரும் என்றனர்.

**கோமாரி நோயை தடுப்பது குறித்து ஆலோசனை அரியலூர் ஒன்றியத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம்**

அரியர், : அரியர் ஒன்றியத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கோமாரி நோய் பரவாமல் தடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.
அரியர் ஒன்றியம் வெங்கடகிருஷ்ணபுரம் ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராமசபை கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் தனபால் அறிக்கை வாசித்தார். ஒன்றிய கவுன்சிலர் வெங்கடாசலம், துணைத் தலைவர் ரதிதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இதேபோல் வாலாஜா நகர ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் இளையராஜா தலைமை வகித்து பேசினார். ஒன்றிய கவுன்சிலர் ரமேஷ், துணைத் தலைவர் சரவணராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
அஸ்தினாபுரம் ஊராட்சியில் ஊராட்சி தலைவர் ராஜாத்தி தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது.
ஒன்றிய கவுன்சிலர் பாலு, துணைத் தலைவர் அன்பு உட்பட பலர் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலர் இளங்கோவன் அறிக்கை வாசித்தார். பெரியநாகர் ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் சாமிதுரை தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் பாலு, துணைத் தலைவர் காமராஜ் ஆகியோர்

முன்னிலை வகித்தனர். காவனூர் ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் தமிழரசி தலைமை வகித்தார். துணைத் தலைவர் குமரேசன் முன்னிலை வகித்தார். தேளூர் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் கருணாநிதி தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் சந்திரா ஜோதிவேல், துணைத் தலைவர் சத்யா முன்னிலை வகித்தனர். ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் ராமநாதன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முனியப்பன் முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலர் கண்ணகி அறிக்கை வாசித்தார். அரியர் ஒன்றியத்தில் நடைபெற்ற கிராம சபையில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. அது குறித்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

**விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காண நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவை**

திருக்கோவிலூர், : விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு நெல் சீசன் துவங்கிய நாள் முதல் 10க்கும் மேற்பட்ட இடங்களில் நுகர்பொருள் வாணிப கழகத்தால் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது. இவ்வாறு துவங்கப்பட்ட நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் கொண்டு வரும் நெல்மூட்டைகளை உரிய பதத்திற்குண்டான விலை நிர்ணயம் செய்யப் பட்ட பின்னர் நெல்மூட்டைகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணப்பட்டுவாடாவும் செய்யப்பட்டு வந்தது. இதனால் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் சீரான நெல் வரத்தும் அதற்கேற்றவாறு விலை நிர்ணயமும் செய்யப்பட்டு வந்தது.

இதனால் போக்குவரத்து பாதிப்பு, மறியல் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் தவிர்க்கப்பட்டது. இந்த ஆண்டு நெல் வரத்து சீசன் துவங்கி இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் விழுப்புரம் மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிப கழகத்தில் நேரடி நெல் கொள் முதல் நிலையம் துவங்கவில்லை. இதனால் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் கடலூர், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தையே நாடுகின்றனர். இவ்வாறு விவசாயிகள் ஒரே நேரத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை நாடும் போது அங்கு விவசாயிகள்

நெல்மூட்டைகளை வைப்பதற்கு போதிய இடவசதியில்லை.
அதுமட்டுமல்லாமல் விலை குறைவு, விளைபொருள் சேதம், கூலி பிரச்னை, வியாபாரிகள் கொள்முதல் செய்ய மறுப்பு போன்றவற்றினால் ஆவேசமடையும் விவசாயிகள் மறியல் உள்ளிட்ட போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். கடந்த ஒரு மாதமாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு ஒருவாரம், பதினைந்து நாட்கள் கழித்து தான் பணம் வழங்கப்படுகிறது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகிறது.
ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வரும் பல்வேறு பிரச்னைகளை களைய கடந்த ஆண்டில் இருந்த இடங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
தற்போது பிற மாவட்டங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் நல்ல பதத்துடன் சன்னரகம் அதாவது ஏ-கிரேடு நெல் குவிண் டால் ரூ.ஆயிரத்து 350 வரைக்கும், பி-கிரேடு நெல் குவிண்டால் ரூ.ஆயிரத்து 300 வரைக்கும் நெல் கொள்முதல் செய்ய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதே நெல்ரகம் குவிண்டால் ரூ.ஆயிரம் முதல் ரூ.ஆயிரத்து 100வரை தான் கொள்முதல் செய்யப்படுகிறது.
ஆகையால் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து விழுப்புரம் மாவட்டத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### ரூ.90½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை



நீர்மட்டம் குறைந்துள்ள நிலையில் வரட்டுப்பள்ளம் அணையை படத்தில் காணலாம்.

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், ரூ.90½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

<u>தேங்காய்</u>

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், விவசாய விளைபொருட்களின் ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு அந்தியூரை சுற்றியுள்ள கிராம மக்கள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 40 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் சிறிய தேங்காய் ஒன்று 3 ரூபாய் 50 காசுக்கும், பெரியதேங்காய் ஒன்று 14 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு விற்பனையானது.

கொப்பரை தேங்காய் 150 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 5 ஆயிரத்து 550 ரூபாய்க்கும்,

அதிகபட்ச விலையாக 7 ஆயிரத்து 200 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.4 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனையானது. கொப்பரை தேங்காய் கடந்த வாரத்தை விட குவிண்டால் ஒன்றுக்கு 500 ரூபாய் குறைந்து விற்பனையானது.

<u>வெள்ளை எள்</u>

வெள்ளை எள் 700 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 11 ஆயிரத்து 169 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 14 ஆயிரத்து 309 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.66 லட்சத்துக்கு விற்பனையானது. கடந்த வாரத்தைவிட குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,000 விலை குறைந்தது.

மக்காச்சோளம் 120 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,105 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,324 ரூபாய்க்கு என மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

<u>நிலக்கடலை</u>

நிலக்கடலை 1,000 மூட்டைகள் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டுவந்து இருந்தனர். இதில் பச்சை நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,515 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் ஏலம் போனது.

காய்ந்த நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 300 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.14 லட்சத்து 5 ஆயிரத்துக்கு விற்பனையானது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 90 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

கோவை, திருப்பூர், தர்மபுரி, மேட்டுப்பாளையம், ஈரோடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்துச் சென்றனர்.

**கால்நடைகளுக்கான தீவனம் மானிய விலையில் வழங்கப்படுகிறது கலெக்டர் தகவல்**



கால்நடை தீவனம்

புதுக்கோட்டை மாவட் டத்தில் கால்நடைகளுக் கான தீவனம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது என்று கலெக் டர் மனோகரன் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது;-

தமிழக முதல்- அமைச்சரால் தமிழ்நாட்டில் சென்னை மாநகரம் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் ஒரு தீவன கிடங்கிற்கு சுமார் ரூ.10 லட்சம் செலவில், 125 தீவனக் கிடங்குகள் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு, மானிய விலையில் சோளத்தட்டை, வைக்கோல் ஆகியவை கால் நடை வளர்ப்போருக்கு வழங்க அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 இடங்களில் தீவனக்¢கிடங்கு அமைய உள்ளது. எனவே, கால் நடைகள் வளர்ப்போர் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனை களின் அடிப்படையில் மானிய விலையில் தீவனம் பெற்று பயன்பெறலாம்.

பதிவு செய்ய வேண்டும்

இந்த தீவனம் பெறுவதற்கு சொந்தமாக கால்நடைகள் வைத்திருக்க வேண்டும்.விவசாயிகள் முதல் முறையாக தீவனம் பெற வரும்போது விண்ணப்பத்துடன் ரேஷன் அட்டை நகல் ஒன்றினை இணைத்து, அருகில் உள்ள

கால்நடை மருந்தகத்திற்கு கொண்டு சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும்போது அவருக்கு தீவன அட்டை ஒன்று வழங்கப்படும்.

ஒரு கால்நடைக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக சுமார் 3 கிலோ சோளத்தட்டை அல்லது வைக்கோல் வீதம் ஒருவாரத்திற்கு ஒரே முறை வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கு மட்டும் மேற்குறிப்பிட்ட அளவுகளில் தீவனம் வழங்கப்படும். ஒரு கிலோ தீவனம் மானியத்தில் வழங்குவதற்கு ரூ.2 என விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**பருத்தியில் இலைப்புள்ளி, சிவப்பு நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

**வேளாண் இணை இயக்குனர் ஆலோசனை**



இலைப்புள்ளி, சிவப்பு நோயால் பாதிக்கப்பட்ட பருத்தி வயலை அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் குணசேகரன் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு செய்தபோதுஎடுத்த படம்.

அரியலூர், -

பருத்தியில் இலைப் புள்ளி, சிவப்பு நோயை கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்து அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் குணசேகரன் ஆலோசனை கூறியுள் ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

<u>பருத்தி சாகுபடி</u>

அரியலூர் மாவட்டத்தில் பருத்தி பயிர் 8 ஆயிரத்து 500 எக்டேரில் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. தற்சமயம் பருத்தி பயிர் பூக்கும் தருணத்திலும் காய் பிடிக்கும் தருணத்திலும் உள்ளது. இந்த நிலையில் பருத்தி பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக நோய் தாக்குதல் அரியலூர் மாவட்டத்தில் கடுகூர் ,கருப்பிலாக்கட்டளை, அயன் ஆத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி களில் அதிக மாக காணப் படுகிறது.

எனவே பாதிக்கப்பட்ட பருத்தி வயல் களில் அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் குண சேகரன், அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்கு னர் மல்லிகா, பேராசி ரியர்கள் கவிமணி, நக்கீரன் ஆகியோர் அடங்கிய குழு நேரில் சென்று ஆய்வு செய்தனர். இது தொடர்பாக அவர்கள் கூறிய தாவது:-

அரியலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தியில் ஆல்டர்நேரியா இலைப்புள்ளி நோய் மற்றும் சிவப்பு இலை நோயின் தாக்கு தல் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக ஆடி மாதம் விதைக்கப்பட்ட பருத்தியில் மேற்கண்ட நோய்களின் தாக் குதல் அதிகமாக காணப் படு கின்றது.

<u>இலைப்புள்ளி நோய்</u>

இலைப்புள்ளி நோய் ஆல்டர் நேரியா மேக்ரோஸ் போரா என்ற பூசணத்தால் ஏற் படுகின்றது.

இப்பூசணம் உகந்த சூழ் நிலையில் 50 சதம் வரை மகசூல் இழப்பை ஏற்படுத்தக் கூடியது. அதிக ஈரப்பதம் மற்றும் மழை வெப்பநிலை 25 செல்சியஸ் முதல் 28 டிகிரி செல்சியஸ் வரை நோய்கள் பரவ சாதகமான சூழ்நிலை களாகும்.

மேலும் பருத்தி பயிரின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ் நிலை இல்லாதபோது இந்த நோய் தோன்றுகிறது. அதிலும் எப்போது தேவையான அளவு ஊட்டசத்துசெடிக்கு கிடைக்க வில்லையோ அல்லது எப்போது வயலில் அதிகமான ஈரப்பதம் உள்ளதோ அப் போது நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். இலைக ளில் வட்டவடிவமான வளை யங்களைக் கொண்ட பல புள் ளிகள் தோன்றுவது இந்நோ யின் ஆரம்ப அறிகுறிக ளாகும். நாளடைவில் பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து இலைப்புள்ளி யின் பரப்பளவு அதிகரித்து இலைகள் பழுப்பு நிறமாக மாறி இலை காய்ந்து விடும். காய்ந்த இலைகள் உதிர்வதால் செடிகளின் இலைகள் இன்றி வெறும் கிளைகள் மட்டுமே இருக்கும். நோய் கிருமிகள் காய்ந்த இலைகளில் இருந்து காற்றின் மூலமும், பாசன நீர் மூலமும் பரவுகிறது.

இந்த நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டெபுகோனசோல் 200 மி.லி, புரோபிகோனோ சோல் 200 மி.லி, ஹெக்சாகோன சோல் 200 மி.லி, குளோரோத லோனில் 200 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

<u>சிவப்பு நோய்</u>

சிவப்பு நோய் மெக்னீசியல் என்ற நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையினால் ஏற்படு கின்றது. இதனால் இலை நரம்புகள் பச்சையாகவும், இலை நரம்புகளுக்கு இடைப் பட்ட பகுதி சிவப்பாகவும் மாறி விடும். இறுதியில் செடி கள் உள்ள இலைகள் காய்ந்து விடும். இதனை நிவர்த்தி செய்ய மெக்னீசியம் சல்பேட் லிட்டருக்கு 5 கிராம், யூரியா லிட்டருக்கு 10 கிராம் கலவையை 15 முதல் 20 நாட் கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கலாம்.

இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்**



அரியலூர், -

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 6 ஒன்றியங்களை சேர்ந்த 14 கிராமங்களை சேர்ந்த 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளன.

இது தொடர்பாக கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது ;-

<u>விலையில்லா வெள்ளாடுகள்</u>

பரம ஏழைகளாகவுள்ள நிலமற்ற விவசாய கூலிகளுக்கு விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் 6 ஒன்றியங்களை சேர்ந்த 14 கிராமங்களை சேர்ந்த 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளது.

<u>ஜனவரி மாதம்</u>

அதன்படி வருகிற ஜனவரி மாதம் ஆண்டிமடம் ஒன்றியம் குவாகம் கிராமத்தை சேர்ந்த 75 பயனாளிகளுக்கும், ஓலையூர் கிராமத்தை சேர்ந்த 54 பேர்களுக்கும், செந்துறை ஒன்றியம் மணப்பத்தூர் கிராமத்தில் 95 பேர்களுக்கும், பாளையக்குடி கிராமத்தில் 50 பேர்களுக்கும், பரணம் கிராமத்தில் 57 பேர்களுக்கும் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

இதே போல் அரியலூர் ஒன்றியம் ஒட்டக்கோவில் கிராமத்தை சேர்ந்த 77 பேர்களுக்கும், ஜெயங்கொண்டம் ஒன்றியம் முத்துசேர்வாமடம் கிராமத்தில் 90 பேர்களுக்கும், திருமானூர் ஒன்றியத்தை சேர்ந்த கோவில்எசனை கிராமத்தில் 73 பேர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

<u>பிப்ரவரி மாதம்</u>

வருகிற பிப்ரவரி மாதம் ஆண்டிமடம் ஒன்றியம் மருதூர் கிராமத்தில் 110 பேர் களுக்கும், பெரிய கிருஷ்ணா புரம் கிராமத்தில் 100 பேர்க ளுக்கும், ஜெயங் கொண்டம் ஒன்றியம் படநிலை கிராமத் தில் 69 பேர்களுக்கும், தா.பழூர் ஒன்றியம் கீழநத்தம் கிராமத்தில் 54 பேர்களுக்கும், கோடங் குடி கிராமத்தில் 27 பேர்களுக்கும், செந்துறை ஒன்றியம் நமங்குணம் கிராமத்தில் 58 பேர்களுக்கும் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

<u>சிறப்பு கிராமசபை கூட்டம்</u>

இது குறித்து வருகிற 10-ந் தேதி அந்தந்த ஊராட் சியில் ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையில் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற விரும்புவோர் பாஸ்போர்ட் அளவுப் புகைப்படத்துடன் விண்ணப்பத்தினை குடும்ப அட்டை, நிலமில்லாச் சான்று, அரசுத் திட்டத்தில் இதுவரை எந்த சலுகையும் பெறவில்லை என்ற சான்று. ஆகிய ஆவண நகலுடன் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

தேர்வு செய்த பயனாளிகள் பட்டியலை 17-ந் தேதி அன்று இறுதி செய்யப்படும். இறுதி செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை 19-ந் தேதி அன்று நடைபெறும் கிராமசபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப் படவுள்ளது.

மேற்கண்டவாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**குறுகி வரும் கொட்டக்குடி ஆறு நிலத்தடி நீர் மட்டம் குறையும் அபாயம்**



போடி அருகே தீர்த்ததொட்டி பகுதியில் புதர் மண்டி ஆறு இருப்பதற்கான சுவடே இன்றி வாய்க்கால் போன்று குறுகி காட்சி அளிக்கும் கொட்டக்குடி ஆற்றை படத்தில் காணலாம்.

உப்புக்கோட்டை,

ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கி உள்ள கொட்டக் குடி ஆறு குறுகி வாய்க் கால் போன்று காட்சி அளிக்கிறது.

இதன் காரணமாக இந்த ஆற்றுப் படுகையை ஒட்டி உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

<u>கொட்டக்குடி ஆறு</u>

தேனி மாவட்டம் மட்டு மின்றி மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களின் குடிநீர், விவசாயத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆறுகளே பிரதான நீர் ஆதாரமாக திகழ்கிறது. குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையில்

முல்லைப் பெரியாறு, வைகை ஆறு, கொட்டக்குடி, மஞ்சளாறு, வராகநதி மற்றும் சுருளியாறு உள்பட 10-க்கும் மேற்பட்ட சிற்றாறுகள் உற் பத்தி யாகி, தேனி மாவட்டத் தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிற்கு பாசன வசதி அளித்து வருகிறது.போடி அருகே உள்ள குரங்கணி மலைப் பகுதியில் இருந்து வரும் கொட்டக்குடி ஆற்றுக்கு மற்றொரு சிறப்பம் சமும் உண்டு. தமிழ்நாட்டில் சிறு வாணி, தாமிரபரணி ஆற்று நீருக்கு இணையான சுவை யுடைய கொட்டக்குடி ஆற்று தண்ணீர் மூலிகை தன்மை உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்கிரமிப்பால் சுருங்கியது

கொட்டக்குடி ஆற்று தண்ணீர் மூலம் போடி நகரம் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்கள் குடிநீர் வசதி பெறுகின்றது. இதுதவிர கொட்டக்குடி ஆற்று பாசனம் மூலம் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் அடைந்து வருகின்றன. தொடக்க காலங்களில் சுமார் 50 மீட்டர் அகலம் இருந்த கொட்டக்குடி ஆறு ஆக்கிர மிப்பால் சுருங்கி தற்போது வாய்க்காலாக காட்சி அளிக் கிறது.

மேலும் போடி நகரின் சாக் கடை மற்றும் தொழிற் சாலை கழிவுகள் கலந்து தண்ணீரை மாசுபடுத்தி வருகிறது. இது தவிர கொட்டக்குடி ஆற்றின் பல்வேறு பகுதிகளில் மணல் திருட்டும் நடைபெற்று வரு கிறது. இதனால் தண்ணீர் தேங்குவதில் சிக்கல் ஏற்படுவ துடன் அருகில் உள்ள கிணறு களில் நிலத்தடி நீர் மட்டமும் கணிசமாககுறைந்து வருகிறது.

கொட்டக்குடி ஆற்றில் போடி அருகே அணைக்கட்ட வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர். அணை கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு முதற் கட்ட ஆயத்தப்பணிகள் நடை பெற்று வருகிறது. அணை கட்டும் பணியையும், குறுகி உள்ள ஆற்றின் ஆக்கிரமிப்பை அகற்றும் பணியையும் அதிகாரிகள் விரைவில் தொடங்க வேண்டும்.

இதன் மூலம் அழியும் நிலையில் உள்ள கொட்டக்குடி ஆற்றுப் பாசன நிலங்கள் மீண்டும் புத்துயிர் பெறும் என்பது விவ சாயிகளின் எதிர் பார்ப்பாகும்.

## ஆர்ப்பாட்டத்திற்காக டெல்லி செல்லும் கரும்பு விவசாயிகளை வழியனுப்பி வைத்தார் வைகோ



சென்னை

சர்க்கரை இறக்குமதியை தடை செய்ய வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டும், கரும்பிற்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாட்டிலுள்ள கரும்பு விவசாயிகள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை தலைநகர் டெல்லியில் நடத்தப்போவதாக அறிவித்தனர். இதற்கு ம.தி.மு.க உள்பட பல்வேறு கட்சிகள், விவசாய சங்க தலைவர்கள் போன்றோர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

அதன்படி டெல்லி செல்வதற்காக நேற்று மாலை 5 மணி அளவில் சென்னை சென்டிரலுக்கு கரும்பு விவசாயிகள் வந்தனர். இவர்களை வழியனுப்ப ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வந்தார். பின்னர் அவர் அங்கிருக்கும் கரும்பு விவசாயிகளை சந்தித்து பேசினார். ஆர்ப்பாட்டம் வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்தி அவர்களை வழியனுப்பிவைத்தார்.

இந்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய கரும்பு விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு ஆலோசகருமான அ.கணேசமூர்த்தி, தமிழ்நாடு ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பி.காசியண்ணன், அகில இந்திய விவசாயத்தொழிலாளர் சங்க தலைவர் வி.சண்முகராசு, தமிழ்நாடு போராட்டக்குழுவின் நெறியாளர் செ.அர்ச்சுணன் மற்றும் சர்க்கரை ஆலை விவசாய சங்க தலைவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் இருந்தனர்.

**சிவாடி பகுதியில் சோளப்பயிர்களுக்குள் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்பு**



நல்லம்பள்ளி

சிவாடி பகுதியில் சோளப்பயிர்களுக்குள் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளால் அவற்றை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

சோளப்பயிர்

தர்மபுரி மாவட்டம் நல்லம் பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட சிவாடி ஊராட்சிக்குள் உட் பட்ட பகுதிகளில் சோளப்பயிர் அதிக அளவில் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ளனர். இந்த சோளப்பயிர் சுமார் 10 முதல் 13 அடி உயரத்திற்கு வளர்ந்துள் ளது. இந்த பகுதிகளில் சோளப் பயிர்களுக்குள் செல்லும் மின் கம்பிகள் தாழ்வாக தொங்கி கொண்டு இருக்கிறது. இதனால் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்குள் செல் வதற்கு அச்சப்படுகிறார்கள்.

இன்னும் சில வாரங்களில் நீண்டு வளர்ந்துள்ள சோளம் அறுவடைக்கு வரும் நிலையில் மின்கம்பிகள் சோளக்கதிரை யும், சோளத்தட்டுக்களையும் தொட்டு செல்லும் நிலை உள்ளதால் அறுவடை காலங் களில் மின்சாரம் தாக்கும் என்ற அச்சத்தில் சோளக்கதிர் கள், தட்டைகளை அறுவடை செய்யாமல் உள்ளனர். மேலும் பல இடங்களில் மின்கம்பிகள் மரங்களை தொட்டும், மின் கம்பங்கள் சாய்ந்த நிலையிலும் உள்ளது. இதனால் அந்த பகுதிகளில் எப்போது என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் பொதுமக்கள், விவசாயிகள் உள்ளனர்.

விவசாயிகள் கோரிக்கை

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், இந்தாண்டு நல்ல மழை பெய்துள்ளதால் மானா வாரி பயிரான சோளம் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டுள் ளது. இந்த சோளப்பயிர் சுமார் 10 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்துள்ளது. இந்த பகுதிகளில் செல்லும் மின் கம்பிகள் மிகவும் தாழ்வாக தொங்குவதால் சோளக்காட் டிற்குள் செல்ல முடியவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் சோளப்பயிர்களை அறுவடை செய்யாவிட்டால் கதிர்கள் அனைத்தும் உதிர்ந்து கீழே விழுந்து விடும். இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும்.

எனவே பொதுமக்கள் மற் றும் விவசாயிகளின் நலன் கருதி தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளை உயரத்தில் எடுத்து செல்வதற்கு நட வடிக்கை மேற்கொள்ள வேண் டும். மரக்கிளைகளில் உரசியப் படி செல்லும் இடங்களில் மரக்கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும் என்று தெரிவித்தனர். உயிர் சேதம் மற்றும் விவசாய பொருட்களில் இழப்பீட்டை தடுக்க தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை உயர்த்தி கட்டவும், மின் மரங் களை வெட்டவும் மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள், விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

**சூளகிரி அருகே விவசாய பயிர்களை நாசம் செய்த யானை கூட்டம்**



சூளகிரி அருகே விவசாய பயிர்களை யானை கூட்டம் நாசம் செய்து சென்றன. ஒரு வாரத்திற்கு பிறகு மீண்டும் யானைகள் வந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**யானைகள் அட்டகாசம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ளது போடூர்பள்ளம் காடு. கடந்த மாதம் 45 யானைகள் இங்கு வந்தன. அவை 25 நாட்களாக அங்கேயே முகாமிட்டு

விவசாய பயிர்களை நாசம் செய்தன. இதில் பல லட்சம் மதிப்பிலான விவசாய பயிர்கள் நாசம் ஆனது.

இந்த யானைகள் கூட்டத்தை வனத்துறையினர் போராடி தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு விரட்டினார்கள். இதனால் கடந்த ஒரு வாரமாக விவசாயிகள் நிம்மதியுடன் இருந்தார்கள்.

விவசாய பயிர்கள் நாசம்

இந்த நிலையில் சூளகிரி அருகே போடூர் பள்ளம் காட்டிற்கு 13 யானைகள் நேற்று முன்தினம் வந்தன. தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் இருந்து ஊடேதுர்க்கம், சினிகிரிப்பள்ளி வழியாக போடூர்பள்ளம் வந்த அந்த யானைகள் நேற்று முன்தினம் இரவு அருகில் உள்ள பாத்தகோட்டா கிராமத்திற்குள் புகுந்தன.

அங்குள்ள விவசாயி சுகுமார் என்பவரின் பீன்ஸ் தோட்டத்திற்குள் புகுந்து பீன்ஸ் பயிர்களை தின்றும், கால்களால் மிதித்தும் நாசம் செய்தன. இதே போல தஸ்தகீர் என்பவரின் ராகி தோட்டத்திற்குள் புகுந்து அங்கிருந்த பயிர்களை தின்றன.

இதே போல சுற்று வட்டாரத்தில் இருந்த காய்கறிகள், நெல், ராகி உள்ளிட்ட பயிர்களையும் யானைகள் கூட்டம் நாசம் செய்து சென்றன. யானைகள் மீண்டும் வந்துள்ளதால் சூளகிரி சுற்று வட்டார விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை**



குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும், தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

<u>தேயிலை ஏலம்</u>

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 49-க்கான ஏலம் கடந்த 5, 6-ந் தேதி நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 17 லட்சத்து 19ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 11 லட்சத்து 64 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 55 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

<u>82 சதவீத தேயிலை தூள் விற்பனை</u>

இந்த ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. விற்பனையான தேயிலை தூளுக்கு ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 180 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 215 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 59 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 125 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 60 ரூபாயில் இருந்து 64 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 165 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 50-க்கான ஏலம் வருகிற 12, 13 ஆகிய நாட்களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 79 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.

**மேடி புயல் எதிரொலி: நாகையில் கடல் சீற்றம்; மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை**



மேடி புயல்

நாகப்பட்டினம்,

மேடி புயல் காரணமாக நாகையில் நேற்று கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இதனால் பைபர் படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

வங்கக்கடலில் கடந்த சில தினங்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை, வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இதனால் சில தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பலத்த மழையும், மிதமான மழையும் பெய்தது. தற்போது இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து புயல் சின்னமாக மாறியது. இந்த புயல் சின்னத்துக்கு மேடி என்று பெயர் சூட்டடப்பட்டுள்ளது.

பைபர் படகு மீனவர்கள்

இந்த மேடி புயலால் தமிழகத்துக்கு எந்த பாதிப்பு இருக்காது என்று கூறப்படுகிறது. நாகை துறைமுகத்தில் தொடர்ந்து 3–வது நாளாக 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் நாகை கடற்கரை பகுதிகளில் கடல் சீற்றம் நேற்று அதிகமாகவே காணப்பட்டது. இதனால் கடற்பகுதியில் ராட்சத அலைகள் எழும்பி வருகின்றன. இதை தொடர்ந்து நேற்று நாகை அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், நம்பியார் நகர், கல்லார், சாமந்தான் பேட்டை, நாகூர் பட்டினச்சேரி, வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பைபர் படகு மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க

செல்லவில்லை. விசைப்படகு மீனவர்கள் வழக்கம் போல் மீன் பிடிக்க சென்று வருகின்றனர்.

<u>வேதாரண்யம்</u>

வேதாரண்யத்தில் வேதாரண்யம், ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், கோடியக்கரை, வெள்ளப்பள்ளம், வாணவன்மகாதேவி, விழுந்தமாவடி, உள்பட பல கடற்கரை பகுதிகளில் கடல் சீற்றம் அதிகமாக இருந்தது. இதனால் வேதாரண்யம் பகுதியில் உள்ள பைபர் படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. இதனால் மீனவர்களின் படகுகள் வேதாரண்யம் கடற்கரையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வேதாரண்யம் போதிய அளவு மழை இல்லாததால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். எனவே விவசாயிகள் தற்போது மழையை எதிர்பார்த்து உள்ளனர்.

கோமாரி நோயால் கால்நடைகளை இழந்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரம் வழங்க வேண்டும் டி.ஆர்.பி. ராஜா எம்.எல்.ஏ. வலியுறுத்தல்

மன்னார்குடி,

கோமாரி நோயால் கால்நடைகளை இழந்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரம் வழங்க வேண்டும் என்று டி.ஆர்.பி.ராஜா எம்.எல்.ஏ. வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>கோமாரி நோய்</u>

தமிழகத்தில் பல இடங்களில் கால்நடைகளுக்கு பரவி வரும் கோமாரி நோய் தாக்கம் குறையவில்லை. தற்போது இந்த நோய் மிக வேகமாக கால்நடைகளிடையே பரவி வருவதாக பொதுமக்களிடமிருந்து வரும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. மன்னார்குடி சட்டமன்ற தொதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிரமாக பரவி வரும் கோமாரி நோயினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்து விட்டன. குறிப்பாக மன்னார்குடி ஒன்றியம் பரவாக்கோட்டை கிராமத்தில் மட்டும் 300–க்கும் மேற்பட்ட கால்நடைகள்

உயிரிழந்திருப்பதாக தகவல்கள் உள்ளது. அதேபோல் கால்நடைகள் உயிரிழந்திருப்பதாகவும் எஞ்சிய கால்நடைகளுக்கும் நோய் பரவி வருவதாக பொதுமக்கள் கூறுகின்றனர். அதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலாக கால்நடைகள் உயிரிழந்து வரும் தகவல்கள் பெரும் அதிர்ச்சியாக உள்ளது.

ஆய்வு செய்ய வேண்டும்

கால்நடை துறையில் உள்ள மருத்துவர்கள் மற்றும் உதவியாளர் பற்றாக்குறையை போக்க அவசர நடவடிக்கையாக வெளிமாவட்டங்களில் இருந்து கால்நடை மருத்துவர்களையும் உதவியாளர்களையும் அழைத்து வந்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு கால்நடைகளுக்கு முழுவீச்சில் சிகிச்சைகள் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னதாக கால்நடை துறை செயலாளர் திருவாரூர் மாவட்டத்தை நேரில் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் உயிரிழந்த மாடுகளின் கணக்கெடுப்பு சரிவர செய்யப்படவில்லை. பல விவசாயிகளின் தண்ணீர் இல்லாமல் விவசாயம் பொய்த்து போகும் காலகட்டங்களில் கறவை மாடுகள் மூலம் வரும் வருமானத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய இழப்பாகும். இதனால் பலரின் வாழ்வாதாரம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு உடனடியாக கணக்கெடுப்பு நடத்தி கோமாரிநோயால் கால்நடைகளை இழந்துள்ளவர்களுக்கு குறைந்தபட்ச இழப்பீடு தொகையாக ரூ. 50 ஆயிரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை லாபத்தில் இயக்க நடவடிக்கை முதல்-அமைச்சர் ரங்கசாமி தகவல்**



திருக்கனூர், -

புதுவை மாநிலம் லிங்காரெட்டிப்பாளையத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையை லாபத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று முதல்-அமைச்சர் ரங்கசாமி கூறினார்.

**<u>கரும்பு அரவை தொடக்கம்</u>**

புதுவை மாநிலம் திருக்கனூர் அருகே லிங்காரெட்டிப் பாளையத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலையில் 2013-2014-ம் ஆண்டு அரவைப் பருவத்துக்கான கரும்பு அரவை தொடக்க நிகழ்ச்சி நேற்று காலை, சர்க்கரை ஆலையில் நடைபெற்றது. இதில் முதல்கட்டமாக பாய்லர் சூடேற்றும் நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கி, பூஜை செய்து, பாய்லரில் நெருப்பு மூட்டி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசும்போது தெரிவித்ததாவது:-

**<u>லாபத்தில் இயக்க நடவடிக்கை</u>**

கடந்த ஆண்டு இந்த ஆலையில் 1 லட்சத்து 70 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டது. இந்த ஆண்டு 2 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. தற்போது இந்த ஆலை நஷ்டத்தில் இயங்கி வருகிறது. அதனை லாபத்தில் இயக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் துணை சபாநாயகர் டி.பி.ஆர்.செல்வம், சர்க்கரை ஆலை சேர்மன் சூரன், நிர்வாக குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், அரிபுத்திரி, மேலாண் இயக்குனர் ராஜசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.